[2019 பிப்ரவரி 14

முற்பகல் 11-10

வினா வரிசை எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

78—

பால் பவுடர் உற்பத்திப் பிரிவு

***2882—திரு. தூசி கே. மோகன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செய்யாறு தொகுதி, அனக்காவூர் ஒன்றியத்திலுள்ள பால் குளிரூட்டும் நிலையத்தில் பால் பவுடர் உற்பத்திப் பிரிவு துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

செய்யாறு தொகுதி, அனக்காவூர் ஒன்றியத்தில் உள்ள ஆவின் பால் குளிரூட்டும் நிலையத்தில் பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தினுடைய காவல் தெய்வம், எங்கள் குல தெய்வம், ஏழையெளிய மக்களுடைய இதய தெய்வம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொன்னடிகளை முதற்கண் போற்றி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்) தலைமை]

2019 பிப்ரவரி 14]

தமிழக மக்களின் இல்லங்களிலும், உள்ளங்களிலும் மகிழ்ச்சி பொங்க, பொங்கல் தொகுப்போடு ரூ.1,000/-மும், தொழிலாளர்களின் நலன் காக்க, தொழிலாளர்களின் தோழனாய், விவசாயிகளுடைய நண்பனாய், ஏழைகளின் ஏந்தலாய், தமிழகத்தின் ஒப்பற்ற முதலமைச்சராய், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் வழியிலும், (குறுக்கீடு)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா இருக்கையிலிருந்து எழுந்து நின்று பேச முற்பட்டார்.)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலும், இருபெரும் தலைவர்களுடைய வழியிலே, அவர்களின் வாரிசாய், இன்று ரூ.2,000/-மும் வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும், தமிழகத்தினுடைய துணை முதலமைச்சர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் அன்போடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவையிலிருந்து வெளியேறினார்.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கின்ற செய்யாறு தொகுதியில் அனக்காவூர் ஒன்றியத்தில் செயல்பட்டுவரும் பால் குளிரூட்டும் நிலையம்மூலம் நாள் ஒன்றுக்கு சுமார் 45,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகின்றது. சுமார் 85-க்கும் மேற்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் சற்றொப்ப 9,900 சங்க உறுப்பினர்கள் பயன்பெறுகின்றனர். மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கிய விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் சுமார் 5,500 லிட்டர் பால் நாள்தோறும் உற்பத்தி செய்யப்படுகிறது. அந்தப் பாலும் இங்கே கொள்முதல் செய்யப்படுகிறது. ஏழையெளிய, ஒடுக்கப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் நலன் காக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கருணையுள்ளம் கொண்டு மீண்டும் பரிசீலனை செய்து பால் பவுடர் உற்பத்திப் பிரிவைத் தொடங்கி, வேலைவாய்ப்பை உருவாக்கி, அவர்களுடைய வாழ்வாதாரம் பெருகிட, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேலூர்-திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் 1-10-1984 அன்று துவங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. இவ்வொன்றியம் வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களை உள்ளடக்கி செயல்பட்டு வருகிறது.*

திருவண்ணாமலை மாவட்டத்தில் 553 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. அவற்றின்மூலம் 2 இலட்சத்து 40 ஆயிரத்து 131 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

வேலூர் மாவட்டத்தில் 324 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. அவற்றின்மூலம் 1 இலட்சத்து 72 ஆயிரத்து 693 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேற்கண்ட இரு மாவட்டங்களில் 877 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் மொத்தம் 4 இலட்சத்து 12 ஆயிரத்து 824 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு, வேலூர்-திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்திற்கு அனுப்பப்படுகிறது. இதனால் 58 ஆயிரத்து 700 பால் உற்பத்தியாளர்கள் பயனடைகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள செய்யாறு தொகுதி, அனக்காவூர் ஒன்றியத்தில் 50,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் செயல்பட்டு வருகிறது. இக்குளிரூட்டும் நிலையத்தில் தற்போது 86 பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் நாளொன்றுக்கு 40,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

செய்யாறு தொகுதி, அனக்காவூர் ஒன்றியத்திலிருந்து 110 கிலோ மீட்டர் தொலைவில், இவ்வொன்றியத்திற்குட்பட்ட திருவண்ணாமலை மாவட்டத்தில் செங்கம் அருகில் உள்ள அம்மாபாளையம் கிராமத்தில் ரூ.73 கோடி செலவில் 2 இலட்சம் லிட்டர் பால் கையாளும் திறன்கொண்ட பால் பண்ணையும்,

2019 பிப்ரவரி 14]

நாளொன்றுக்கு 20 மெட்ரிக் டன் பால் பவுடர் உற்பத்தி செய்யும் திறன்கொண்ட தொழிற்சாலையும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின்கீழ் இயங்கி வருகின்றன.

மேலும், புதியதாக ஒரு பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க சராசரியாக நாளொன்றுக்கு 2 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படவேண்டும். செய்யாறு தொகுதி, அனக்காவூர் ஒன்றியத்திற்குட்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் மேற்குறிப்பிட்டுள்ள அளவு பால் உற்பத்தி செய்வதற்கான சாத்தியக்கூறுகள் தற்பொழுது இல்லை. எனவே, திருவண்ணாமலை மாவட்டத்திற்குட்பட்ட செய்யாறு தொகுதி, அனக்காவூர் ஒன்றியத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தில் புதியதாக பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க வாய்ப்புகள் இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, இப்பகுதியில் மேற்குறிப்பிட்டவாறு நாளொன்றுக்கு சராசரியாக 2 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்வதற்கான சாத்தியக்கூறுகள் அமையும்பட்சத்தில், அனக்காவூர் ஒன்றியத்தில் புதிதாக ஒரு பால் பவுடர் தொழிற்சாலை அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச்சென்று, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி.எம். நரசிம்மன்): *மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.*

திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, செய்யாறு தொகுதி, வெண்பாக்கம் வட்டம், சுமார் 91 வருவாய் கிராமங்களை உள்ளடக்கியது. 38,325 குடும்ப அட்டைதாரர்கள் உள்ளனர். அப்பகுதியில், சுமார் 1,25,000 மக்கள் வசிக்கின்றனர். அவர்கள் கால்நடைகள்மூலம் பெறும் வருமானத்தையும் மற்றும்

விவசாயத்தையும் நம்பி வாழ்கின்ற மக்கள். 33 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக 1106 சங்க உறுப்பினர்கள் நாள்தோறும் சுமார் 9000 லிட்டர் பாலை உற்பத்தி செய்கின்றனர். அவர்களின் வாட்டத்தைப் போக்கிட, இவர்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றிட வெண்பாக்கம் வட்டத்தில்-பால் குளிரூட்டும் நிலையம், BMC *ஒன்றினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு அமைத்துத் தருமாறு அன்புடன் வேண்டி நன்றி கூறி, அமைகிறேன். நன்றி, வணக்கம்.*

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள் சொல்லியிருக்கின்ற கருத்து, நியாயமான கருத்து. நியாயமான கோரிக்கை. அவருடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று, அங்கு* BMC *ஒன்றை அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, அவரே சில குறிப்புகளைச் சொல்லியிருக்கிறார். திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டங்களை உள்ளடக்கிதான் வேலூரில் கூட்டுறவு பால் ஒன்றியம் இருக்கிறது. ஏற்கெனவே ஒரு முறை கவன ஈர்ப்பு அறிவிப்பில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தேன். அதிகமான பால் உற்பத்தியாவது, திருவண்ணாமலை மாவட்டத்தில்தான். அதனால்தான் அங்கு ஒரு பால் பவுடர் தொழிற்சாலை உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, புதியதாக ஒரு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தை திருவண்ணாமலையில் உருவாக்கித் தர வேண்டுமென்று கவன ஈர்ப்பில் கேட்டபோது, விரைந்து செயல்பட்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனவே, அதிகமாக பால் உற்பத்தி*

2019 பிப்ரவரி 14]

இருக்கின்ற திருவண்ணாமலை மாவட்டத்தில், 2 இலட்சம் லிட்டருக்கும் மேற்பட்ட அளவில் பால் உற்பத்தியாகின்ற காரணத்தால், வெகு நாட்களாக அந்தக் கோரிக்கையைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இது சம்பந்தமாக விரைந்து செயல்பட்டு ஆவன செய்வார்களா என்று உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கின்ற கோரிக்கை, புதிதாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைக்கப்படுமா என்பது. அது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஆலோசனை செய்யப்படும். ஏற்கெனவே 2 புதிய பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு, ஆகியவற்றைப் பிரித்து திருப்பூர் பால் கூட்டுறவு ஒன்றியமும், சேலத்தைப் பிரித்து நாமக்கல் பால் கூட்டுறவு ஒன்றியமும் தற்போது அமைக்கப்பட்டு நடைமுறையில் இருக்கின்றன. வேலூர் கூட்டுறவு ஒன்றியமும் மிகப் பெரிய கூட்டுறவு ஒன்றியம். முன்னாள் அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், திருவண்ணாமலை அதிக அளவில் பால் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு பகுதி. ஆகவேதான், மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் அங்கு அதற்காக மிகப் பெரிய கட்டமைப்பு வசதிகளைச் செய்து, பால் பவுடர் தொழிற்சாலையை அமைத்திருக்கிறார்கள். அவர் கூறியதுபோல், தனியாக ஒரு கூட்டுறவு பால் ஒன்றியம் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அது மட்டுமல்ல, திருச்சி, மதுரை மற்றும் தஞ்சாவூர் போன்ற பெரிய கூட்டுறவு ஒன்றியங்களையெல்லாம் பிரித்துக் கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 79, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*